ஸ்ரீ காஞ்சி காமாக்ஷி அம்பாள்

ஸ்தல வரலாறு



ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் தேவஸ்தான வெளியீடு

ஸ்ரீ

காஞ்சிமாநகர்

ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் தலவரலாறு

ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் தேவஸ்தான பரம்பரை தர்மகர்த்தாக்களான
ஸ்ரீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு
ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களின்
ஸ்ரீ கார்யம் & ஏஜண்டு அவர்களால்
பிரசுரிக்கப்பட்டது.

உ

முகவுரை

திருவாளர் ராவ்பகதூர் **C. M. இராமசந்திர செட்டியார் B.A., B.L.,** அவர்கள் அனுப்பிய சுற்றறிக்கையின்படி, “இக் காமாக்ஷியம்பாள் தலவரலாறு” வெளியிடப்பெறுகிறது. இது, காஞ்சீபுரத்திலுள்ள ஸ்ரீ காமாக்ஷியம்மன் கோயிலைப் பற்றி, பக்தகோடிகளுக்குத் தெரிய வேண்டிய விஷயங்களைக் கூறுகின்றது.

இதை அன்புடன் எழுதி வெளியிடுவதற்குதவிய கடலூர், வித்துவான் ஸ்ரீ **T.A. ஸ்ரீனிவாஸாசாரியார்** அவர்கட்கும், ஸ்ரீ **V. கிருஷ்ணஸ்வாமி சர்மா G. D. A., R. A.,** அவர்கட்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காஞ்சீபுரம்
21—7—1944

K. S. வெங்கட்டராமய்யர்
ஸ்ரீ கார்யம் & ஏஜண்டு



உ

காஞ்சிமாநகர்

ஸ்ரீ காமாக்ஷியம்பாள் தலவரலாறு

“எம்பி ராட்டிஇவ் வேழுல கீன்றவள்
தம்பி ராணைத் தனித்தவத் தால்எய்திக்
கம்பை யாற்றில் வழிபடு காஞ்சியென்(று)
உம்பர் போற்றும் பதி.”

— பெரிய புராணம்

முன்னுரை

இவ்வுலகத்தை நடாத்தும் பராசக்தியே உயிர்கட்குத் தாயாவாள். இத்தாயே அறநெறியினை இவ்வுலகில் நம்மனோர் அறியும் வண்ணம் செய்து காட்டினள்; காட்டி வருகின்றனள். அறங்கள் முப்பத்திரண்டு வகையுடையன. இவ்வறங்களை யெல்லாம், நந்தாயாகிய இவ்விறைவி, நம்பொருட்டாக,

இறைவனை அருச்சித்து, வழிபட்டு ஆற்றலுற்றாள். அவ்வாறு அறம்புரியும் ஆசைபூண்ட அருள்நோக்குடையவளே **காமக்கண்ணியாராகிய ஸ்ரீ காமாக்ஷியம்மையார்.** இவ்வம்மையார், செம்மையாம் நல்லறம் செய்தற்குத் தேர்ந்து கொண்டது **காஞ்சிமாநகரே.**

முத்தியாகிய பயனை விளக்கும் அறமாகிய வித்து, இறைவியால் விதைக்கப்படுதற்கு ஏற்ற விளைபுலம் இக்காஞ்சியம்பதி. இதன் பெருமையைப் பலரும் பற்பலவாறு பகர்ந்துள்ளனர். இப்பெருமைகளையெல்லாம் காஞ்சிப்புராணம், காமாக்ஷீ விலாஸம், கந்தபுராணம், திருத்தொண்டர் புராணம் முதலிய நூல்களிற் பரக்கக் காணலாம். இவ்வூர் மிகவும் பழமை வாய்ந்தது. முத்தி பயக்கும் ஏழுநகரங்களுள் ஒன்று. இந்நகரினை 'ஸ்ரீசிவஞானி நெஞ்சுவிடு தூது' என்னும் நூலிலே துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்:—

"... பேயேன்
ஏழுநகரி னுட்சிறந்த தென்பதலாற் சீர்மை
முழுதும் இயம்ப முடியாது—அழுதறுவேற்
கந்தனுயர் கச்சிவளம் காற்கூ றவுரைப்பன்;
ஐந்துகரன் சொல்வன் அரைக்கூறு;—நந்தம்அரன்
கூறுடையாள் ஓர்முக்காற் கூறுரைப்பள்; முற்றும்இள
ஏறுடையான் சொல்வன்என அனந்தன்—வீறுடைய
நாவா யிரங்கொண்டு நானுரைத்தல் காற்கிழென்(று)
ஓவாத நாணுகி ஓடியே—தாவாத
வேலை யிடை வீழ—" எனத்திருவாய்மலர்ந்துள்ளார்

மேலும், அவர், இந்நகர்ப் பெயர் காசியின் பெயரையும், தன்னகத்தே அடக்கிக்கொண்டுள்ள

தன்மையை "காசி நடுமெய்ஞ்ஞுகரமுறும் எண்ண அறிய எழில் நகர்" என்று உரைத்தும் சிறப்பித்துள்ளார். வேதமும் இந்நகரைப் புகழ்ந்து கூறும் சிறப்பை, "ஏனையபோல் புராணமலது மறைகூறும் திருவார் கச்சி" என்றுரைத்தும் பாராட்டியுள்ளார்.

இந்நகர், பழமையும், சிறப்பும் தூய்மையுங் கொண்டது; உயர்ந்த மதில்களையுடையது: திருமாலின் திருவுந்திக்கமல மணி போன்று விளங்குவது. அன்னவனதுவாகனமாகிய கருடன் போலும் தோற்றமைந்தது. பல தெய்வங்கட்கும் நிலைக்களன். நீர்வளமும் நிலவளமும் நிறைந்தது. சோழர், பல்லவ ராதியோர்க்குத் தலைநகராக விளங்கியது. சோழன் கரிகாலனுல், தலத்தின் பெருமையுணர்ந்து புதுப்பிக்கப்பட்டது. ஐயடிகள் காடவர்கோன் நாயனுரால் அரசாளப்பெற்றது. சுந்தரமூர்த்தி நாயனுருக்கு இடதுகண் பார்வையையளித்தது. சாக்கிய நாயனுருக்கும், திருக்குறிப்புத் தொண்டருக்கும் முத்தியளித்தது. காலன் கால் வைக்காத கவினுடைய நகரெனப் பாராட்டப் பெற்றது. வேதாந்தத்தையும், ஆறுமதங்களையும் விளக்கியருளிய வித்தகராகிய ஸ்ரீ ஆதிசங்கராசாரியார் வீற்றிருந்த விழுப்பம் கொண்டது. கொண்டல் வண்ணற்குச் சித்தியளித்த குலநகர். கச்சபாலயம் முதலிய சிவாலயம் பல உடையது. அட்டபுயம் முதலிய விஷ்ணுவாலயங்களையும் கொண்டது. கம்பை முதலிய புண்ணிய தீர்த்தம்பல பொலிந்தது. சாத்தனைக் காவற்றெய்வமாக வுடையது.

பஞ்சபூத சிவத்தலங்களுள், இத்தலம், 'பிருதிவி க்ஷேத்திரம்' என்று கூறப்படும் பதினெண் மொழிகள் பகரப்படும் ஐம்பத்தாறு நாடுகளிலும் இதன் புகழ் பரவி யிருந்தது; இருக்கிறது.

ஊர் விவரம்

இது சென்னை மகாணத்தில், செங்கற்பட்டு ஜில்லாவில் உள்ளது. பண்டைத்தமிழர் கண்ட பிரிவின்படி இது தொண்டைமண்டலத்தின் நடுநாயகமாகிய திருத் தலமாம். 'துண்டீரநாடு' அல்லது 'தொண்டை மண்டலம்' என்னும் இப்பகுதிக்கு, வடக்கே திருப்பதியிலுள்ள சுவாமி புஷ்கரணியும், கிழக்கே மஹாபலிபுரத்துச் சமுத்திரமும், தெற்கே தென்பெண்ணையும், மேற்கே சிலாஹ்ரதம் என்னும் மடுவும் எல்லைத் தீர்த்தங்கள். இத்துண்டீரமண்டலத் துக்குக் காஞ்சியம்பதியே தலைநகராய் விளங்கிற்று. செங்கற்பட்டிலிருந்து, அரக்கோணம் செல்லும் பாதையில், 'இவ்வூர் ரயில்வேஸ்டேஷன்' உண்டு. ஸ்டேஷனிலிருந்து சுமார் ஒருமைல் தூரத்தில் நம் ஸ்ரீ காமாக்ஷியம்மன் தேவாலயம் இருக்கிறது. இவ்வூர், நான்குகாத எல்லைகொண்டதெனப் பெரிய புராணம் கூறுகிறது. ஊர் பெரிது; பல பிரிவுகளை யுடையது; மிக அகலமான வீதிகளையுடையது. இந்நகர் 'முனிசிபாலிட்டியாரின்' ஆட்சிக்குட்பட்டது. பழைய தமிழ்நூல்களும் இந்நகரினைச் சிறப்பித்துக் கூறுகின்றன. தலயாத்திரை புரிவோர் எந்நாளும் வந்து தங்கிப் பல சிவத்தலங்களையும், விஷ்ணுத் தலங்களையும் தரிசித்துச் செல்ல வசதிகள் உண்டு.

அவ்வாறு வசதியளிக்கும் பல சத்திரங்களில் கங்காபாய் சத்திரம், கோல்லா கன்னய்யாசேட்டி சத்திரம் என்ற இரண்டும் முக்கியமானவை. இவற்றுள், 'கோல்லா சத்திரம்' அம்பாள் கோயில் வாயிலருகிலேயே இருக்கிறது. ஜனநெருக்கமுள்ள இந்நகரம், நெசவுத் தொழிலுக்குப் பேர்பெற்றது.

ஊரின் பெயர்கள்:—'காஞ்சிபுரம்' என்னும் பெயர், இவ்வூர்க்கு அமைந்ததற்குப் பல காரணங்கள் உண்டு. இத்தலத்தில், பொன்மயமான 'காஞ்சி' என்னும் மரம் பொற்கிளைகளையும், மரகத இலைகளையும், நவமணிக்கனிகளையுங் கொண்டு விளங்கியமையால் இப்பெயரெய்திற்று என்பர். சிலர் மணமகளின் உந்தித்தானமாயிருத்தல் பற்றி இப்பெயர் வந்ததென்பர். 'காஞ்சி' யென்பது ஒட்டியாணம்; பூமகளுக்கு 'ஒட்டியாணம்' என்னும் அணிபோல், அழகு செய்வதால் இப்பெயர் பெற்றதென்பர் வேறு சிலர். இது 'கச்சி' யெனவும், கூறப்படுகிறது. பிரளயசித், சிவபுரம், விண்டுபுரம், திரிமூர்த்திவாசம், பிரமபுரம், பிரமசாலை, தபோவனம், ஜகச்சாரம், சகலசித்தி, கன்னிகாப்பு, தொண்டீரபுரம், தண்டகபுரம், காமபீடம் என்பன, இந் நகருக்கு வழங்கும் வேறு பெயர்கள். சத்திய சத்தியர், சத்திய சோதகர், சத்திய சங்கல்பர், சத்திய காமர் என் போராகிய சரியை, கிரியை, யோகம், ஞானம் என்கிற நானிலைகளை மேற்கொண்டவர்கள் வாழப்பெற்ற காரணத்தால் சத்திய விரத க்ஷேத்திரம் என்ற பெயரும் இதற்கு உண்டு. யோகாதாரங்களில் இது துவாத சாந்தித முத்தி க்ஷேத்திரமாகும்.


திருக்கோயில் (காமக்கோட்டம்)

இவ்வூரில் சிவாலயங்களும், விஷ்ணுவாலயங்களும் பலவாகச் சூழ்ந்திருப்பினும், இந்நூல் எடுத்துரைக்க வந்தது ஸ்ரீ காமாக்ஷியம்மையின் தேவாலயத்தைப் பற்றியேயாம்.


இவ்வாலயம் இக்காஞ்சிமா நகரின் மத்தியில் அமைந்துள்ளது. இவ்வூரின் இருதயஸ்தானம் இதுவே. இக்காமக் கண்ணி கோட்டமே இவ்வூரில் முக்கியத்துவம் உடையது. இதுபற்றியே "காஞ்சி காமாக்ஷீ" என்ற முதுமொழியும் வழங்கிவருகிறது. இக்காம கோட்டமே, இந்நகரின் கேந்திரஸ்தான மாகும். 'இது கிழக்கு நோக்கிய திருவாலயம், என்ருலும், திக்குநியமத்தில் சற்றுச் சாய்ந்தேஅமைந் திருந்திருக்கிறது. இதனுல், இக்கோயினுள் புக்கவர் திசை தெரியாமல் மயங்குவர் என்று கூறப்படுகிறது. இது "அந்தமின்றி நல்லறம் புரிந்தளிக்கும்அன்னை தன் திருக்காமக் கோட்டத்தில், வந்து சந்திர சூரியர்மீது வழிக்கொளாத தன் மருங்கு போதலினுல், சந்த*மாதிரம் மயங்கி யெம்மருங்கும் சாயை மாறிய தன் திசை மயக்கம், இந்த மாநிலத்தவரெலாம் காண என்றும் உள்ளதொன்று; இன்றும் அங்குளதால்" எனப் பெரியபுராணத்தில் புகழப்பட்டுள்ளது. இக்கோயிலின் நான்கு பக்கங்களிலும் நான்கு கோபுரங்கள் உண்டு. இக்கோபுரங்களில், கீழைக் கோபுரமே உயர்வுடையது. சுமார் 90அடி உயரமும்,

---

* மாதிரம்=திசை



— கீழராஜகோபுரம் —


N
மேலண்டை மாட வீதி
மேற்குக் கோபுரம்
5
வட வண்டை
6
7
வடக்குக் கோபுரம்
8
மாட வீதி
கொட்டகை உற்சவ மண்டபம்
மண்டபம்
2
குளம்
4
நவராத்திரி கொலு மண்டபம்
மண்டபம்
3
9
மண்டபம்
பெருமாள் சன்னிதி
10
காமாக்ஷி அம்மன் கோயில்
சுக்கிரவார மண்டபம்
16
17 கிணறு
19
20
வாகன மண்டபம்
தெற்குக் கோபுரம்
21
விசுவநாதர் கோயில்
12
11
13
15
த்வஜ ஸ்தம்பம்
பைரவர் சன்னிதி
18
22
14
மடப்பள்ளி
மண்டபம்
கிழக்கு மாட வீதி

60 அடி அகலமும் கொண்டது. மற்ற கோபுரங்கள் இதனிற் சிறியவை. நான்கு வெளிச் சுற்று மதில்கள் உண்டு. இவ்வெளி மதிலின் கிழக்குச் சுவர் 388 அடி நீளம் உள்ளது மற்ற தெற்கு - மேற்கு, வடக்குச் சுவர்களின் நீளம் முறையே 488½ அடி, 440 அடி, 396 அடி ஆகும். இக்கோயிலின் நாற்புறமும் நான்கு மாடவீதிகள் திகழ்கின்றன. சந்நிதித்தெரு கிழக்கு வீதியிலுள்ளது. கோயிலினுள் மூலமண்டபம் "**காயத்ரீமண்டபம்**" எனப்பெயர்பெறும். இதனை ஆதாரமாகக்கொண்டே மூலஸ்தானம் முதலியன விளங்குகின்றன. இக்காயத்ரீ மண்டபத்தைச் சுற்றியுள்ள உள்வளையின் சுவர்களின் நீளமும், அகலமும் பின் உள்ளவையாகும்:—

கிழக்குச்	சுற்று	70	அடி	நீளம்	13½	அடி	அகலம்
தெற்கு	,,	72	,,	,,	9	,,	,,
மேற்கு	,,	80	,,	,,	20	,,	,,
வடக்கு	,,	72	,,	,,	8½	,,	,,

இக்காயத்ரீ மண்டபம், இப்பெயருள்ளமந்திரத்தையொட்டி 24 தூண்களை யுடைமையால் இப்பெயரடைந்தது. இதுமேடையாகஉள்ளது. மூலஸ்தானமும், சக்கரப் பிரதிட்டையும், கருப்ப கிருகமும் இம் மண்டபத்தைச் சார்ந்தவை. இம்மண்டபத்தின் வெளிச்சுவருக்கும், உட்சுவருக்கும் இடையிலே தர்மஸ்தம்பம் என்ற பெயர் கொண்ட தூணம் ஒன்றுள்ளது. சந்நிதியில் நந்திக்குப் பதிலாகச் சிங்க உரு உள்ளது.

இக்கோயிலினுள்ளே கொடியேற்று மன்றம், மடைப்பள்ளி, விசுவநாதர்கோயில், நவராத்திரி மன்றம், நடுமன்றமுள்ள திருக்குளம், உற்சவமன்றம், நூற்றுக்கால் மன்றம் வெள்ளிவார மன்றம், கிணறு, ஊர்திகள் மன்றம், பைரவர்கோட்டம், வேள்விச்சாலை முதலிய பலநிலையங்கள் இருக்கின்றன. இத்திருக் கோயிலின்காவற், றெய்வமாகிய சாத்தன் து அருளினாலே, கரிகால்வளவன் 'செண்டு' என்னும் ஆயுதத்தைப் பெற்றுக்கொண்டு இமயமலையை அடித்துத் திரித்துப் பொறித்து மறித்து நிறுத்தினன் என்ற செய்தி,

> "கச்சி வளைக்கைச்சி காமக்கோட்டங் காவல்
> மெச்சி யினிதிருக்கும் மெய்ச்சாத்தான்—கைச்செண்டு
> கம்பக் களிற்றுக் கரிகாற் பெருவளத்தான்
> செம்பொற் கிரிதிரித்த செண்டு"

எனச் சிலப்பதிகார உரை மேற்கோட் செய்யுளிலும், "செண்டு கொண்டு கரிகால னொருகாலி லிமயச் சிமைய மால்வரை திரித்தருளி மீளவதனைப் பண்டு நின்றபடிநிற்க இதுவென்றுமுதுகிற் பாய்புலிப்பொறி குறித்தது மறித்த பொழுதே"

எனக் கலிங்கத்துப் பரணியிலும் கூறப்பட்டிருக்கிறது.

இக்காமாக்ஷியம்மன் கோவில் கருவறையின் பின்புறச் சுவரில்; ஒரு சிறு பிறையில், 'கள்வர் என்ற நாராயண மூர்த்தி உள்ளார். இம்மூர்த்தி, ஆழ்வாராதியரால் பாடப் பெற்றவர். இரண்டாம் வளைவிலுள்ள

திருக்குளக்கரையில் 'நின்ருன்', 'இருந்தான்' 'கிடந்தான்' என்று மூன்று திருப்பெயர்களுடன் மூன்று மாடங்களில் திருமால் விளங்குகிருர். இக்காமகோட்டம் முழுவதும், ஸ்ரீ பராசக்தியினது ஸ்ரீ சக்ரயந்திர கோணத்தின் அமைப்பை ஒட்டியே அமைக்கப்பட்டுள்ளதெனக் கூறுகிருர்கள். இக் காமாக்ஷியம்மை ஆலயத்தின் ஒரு பகுதியிலே, ஸ்ரீ ஆதிசங்கருடைய சமாதி இருப்பதாகச் சொல்லப் படுகிறது. இவ்வம்பிகையின் திருக்கோயிலில், துருவாசமுனிவருடைய சிலையும், ஆதி சங்கரா சாரியாரது சிலையும், எதிரெதிராக அமைக்கப்பட் டுள்ளன. இவ்வாலயத்துப் பெரிய வாசலின் உட்படிக்கருகில், இருமருங்கிலும் தென்புறச் சுவரில் 'அயக்கிரீவர் வடிவம்' வடபுறச்சுவரில் 'அகத்தியர் வடிவும்' நிறுவப் பெற்றுள்ளன.

இக்காம கோட்டத்தின் அமைப்பு விவரங்களை இதனேடு இணைக்கப்பட்டுள்ள தரைப்படத்தில் காணலாகும்.


இதர கோட்டங்கள்:—மேற்குறித்தகாமகோட்டமே யன்றிக் காஞ்சிமாநகரில் உருத்திரகோட்டம், புண்ணிய கோட்டம் என்னும் இருவேறு பெருங்கோட்டங்களும் உண்டு. உருத்திர கோட்டம் என்பது பெருங் காஞ்சியில் மன்னியுள்ள 'ஏகம்பர்' ஆலயமாகும். புண்ணிய கோட்டம் என்பது சின்ன காஞ்சியில் எழுந்தருளியுள்ள வரதராஜப்பெருமாளாலயமாகும். இந்நகரில் 'குமரகோட்டமும்' பிரசித்திபெற்ற ஒன்ருகும்.

இந்நகரிலே நித்தியபூஜை நிகழுறும், சிவ, விஷ்ணு, சக்தி, குமாரஆலயங்கள் சுமார் நூற்றுக்குக் குறைவின்றி உள்ளன. இக்காஞ்சியின் முக்கிய தேவாலயங்கள் யாவும், ஸ்ரீ காமாக்ஷியம்பாள் கோட்டத்தை நோக்கு முகமாகவே அமைந்துள்ளன. உற்சவ காலங்களில், எல்லாத் தெய்வங்களும், காம கோட்டத்தை வலம் வந்தே செல்லுவதால் இந்நகருக்கு இக்கோட்டமே நடுநிலையாமெனக் கூறுதல் மிகையன்று.


இவ்வுலகிலே 51 அக்ஷரங்களின் அறிகுறியாக, 51 சக்தி பீடங்கள் உண்டு. அவற்றுள் மூன்று பீடங்கள் முக்கியமானவை. அம்மூன்றும் நம் இந்தியாவிலேயே அமைந்துள்ளன. இவை நம் நாட்டில் முக்கோண நிலையில் உள்ளன. ஒன்று பஞ்சாப் மாகாணத்திலும், ஒன்று அஸாம் மாகாணத்திலும் இருக்கின்றன. மூன்றாவதாகிய 'வாக்பவகூடம்' என்னும் 'காமராஜ பீடம்' காஞ்சியில் உள்ளது. இது அயக்கிரீவரால் பூசிக்கப்பட்ட பீடமென்று கூறப்படுகிறது.

திருவுருவச் சிறப்புகள்

இக்கோயில் திருவுருவங்களுள் முதன்மை வாய்ந்தது ஸ்ரீ காமாக்ஷியம்மையின் உற்சவத் திருவுருவாகும். இவ்வூரில் இப்பராசக்தியம்மை தனிக்கோயில் கொண்டெழுந்தருளியிருப்பினும் மூலஸ்தானத் திருமேனி இக்காஞ்சியம்பதியிலுள்ள எந்தச் சிவாலயத்திலும் இல்லை. இவ்வூரினிடத்திலே இவ்



— ஆலயத்தோற்றம் —



— ஆலயத்தின் மற்றொரு தோற்றம் —

வம்மையார் தவக்கோலத்துடனிருப்பதால்தான் மூல உருநிலை இல்லையெனக் கூறுவர். வசிட்டமுனிவரால் ஸ்ரீ ராமனுக்கு உபதேசிக்கப்பட்ட 'சிந்தாமணி' என்னுந் தந்திர நூலிலே, இக் காஞ்சிநகர்க் காம கோட்டம் ஆகாசபீடமாகக் கூறப்பட்டிருத்தல் கவனிக்கத்தக்கது. மூலஸ்தான காமாக்ஷீதேவியின் சந்நிதியில் பூமிக்குள் பிலாகாசம் விளங்குவது இதற்குச்சான்று. இதுவே, இவ்வம்பிகையின் முக்கிய ஸ்வரூபமாக வழிபடப்படுகிறது. இத்தேவி மிகவும் மகிமையுடையவள்;அகத்தியரால்வழிபடப்பட்டவள். இவ்வம்பிகை, பண்டாசுரவதையைக் குறித்து தேஜஸ்ஸிலிருந்து அல்லது சிதக்னியிலிருந்து தோன்றியவள். பிரமதேவனால், '**காமாக்ஷீ**' எனத் துதிக்கப்பட்டவள். இந்த அம்பாள் மிக்க உக்கிர கலையோடு கூடியிருந்ததாகவும், ஆதி சங்கரர் தமது தவவலிமையைப் பயன்படுத்திச் சாந்த வடிவங் கொண்டு மக்களுக்கு அருளுதவும் வண்ணம் ஆக்கி யுபகரித்தனர் என்றும் சொல்லப்படுகிறது, ஸ்ரீமூககவியின் இத்தேவி தோத்திரப் பாடல்களில், 'இவ்வம்பிகை கங்கணம் பூண்ட கைகளையுடையவள்' என்று கூறப்பட்டுள்ளாள்; சிலப்பதிகாரமென்ற தமிழ்க் காவியத்து உரைமேற் கோட்செய்யுளிலும் "கச்சிவளைக்கைச்சி" என்று புகழப்பட்டுள்ளாள்.

இவ்வம்மையின் தேவாலயத்திலே உற்சவ மூர்த்திகளைத் தவிர்த்து, ஐந்து காமாக்ஷி ஸ்தானங்கள் ஏற்பட்டுள்ளன. 1. பிலாகாசம் 2. ஸ்ரீ சக்ரம் 3. மூல காமாக்ஷி 4. தவக்காமாக்ஷி 5. பங்காரு காமாக்ஷி என்பன இந்த ஐந்திடங்களாம்.

1. **ஸ்ரீ பங்காரு காமாக்ஷியின் விவரம்:**—இவற்றுள் ஸ்ரீ பராசக்தியினுடைய நெற்றிக்கண்ணினின்று உதித்தருளிய ஒளிப்பிழம்பான ஸ்ரீத்ரிபுரசுந்தரியின் வடிவமே பிரம்மதேவனால் கைக்கொள்ளப்பட்ட ஸ்ரீ பங்காரு காமாக்ஷீ. இந்தச் சுவர்ண காமாக்ஷித் திருவுருவம் சுமார் முந்நூறு ஆண்டுகட்கு முன்பு, கர்நாடகப் போர்க்காலத்திலே, திருச்சி ஜில்லா, உடையார்பாளையம் சமஸ்தானத் தவரால் பாது காப்பாகத் தம் ஸமஸ்தானத்திற்குக் கொண்டுபோகப் பட்டது. இன்றும், உடையார் பாளையம் சிவன் கோயிலில் 'காமாக்ஷியம்மன் மண்டபம்' என்ற ஒன்று இருந்து வருகிறது. அப்பால், சில காலஞ் சென்று, தஞ்சாவூர் மஹாராஷ்டிர வமிசத்துப் பிரதாபசிம்ம மன்னரால் தஞ்சைக்கு எழுந்தருளுவிக் கப்பட்டது. இன்றும், இவ்வூரில், இத்தேவியார் தனிக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கின்றனர். மேற்கூறிய மூலகாமாக்ஷீ முதலானவர்கள் வீற்றிருந் தருளும் ஸ்ரீ காயத்ரி மண்டப மேடையை மிதித்த தோஷமானது இந்த 'ஹேம காமாக்ஷி'யம்மையைத் தரிசிப்பதால் நீங்கிவிடுமென்று சொல்லப்பட்டுள்ளது. இத்தலத்தில், அப் பங்காரு காமாக்ஷியிருந்தவிடத்தில் இப்போது, அவ்வம்மையாரின் ஆதாரபீடம்மாத்திரம் இருக்கிறது.

இச்சந்நிதிக்கெதிரிலுள்ள பெரியமண்டபத்திலே தான் ஸ்ரீ ஆதிசங்கரர் ஸர்வஜ்ஞபீடம் ஏறியதாக வழங்கப்படுகிறது.

2. **தவக்கோலக் காமாக்ஷியின் திருவுருவம்;**—இவ் வடிவம் மூலத்தானத்தின் பக்கத்தில், ஒற்றைக்காலில்



— ஸ்ரீ மூலகாமாக்ஷி —

நின்று தவம்புரியும் காட்சியாக அமைந்துள்ளது. இத்தகைய திருவுருக்கள் இக்காம கோட்டத்திலும், ஏகாம்பரேசராலயத்திலும் மண்டபம், தூண், கோபுரம், வாயிற்படி முதலிய விடங்களில் பலவாகக் காணப்படுகின்றன. இக் காஞ்சியில், அம்பாள் தவம் புரிசெயலை, இத்திருவுருவங்கள் நினைவூட்டுவனவாக வுள்ளன. இத்தவக்கோலம், ஒரு கால் மடக்கப்பட்டு வயிற்றினிடமாகவும், ஒருகால் கீழே ஊன்றப்பட்டும், சடாமுடியுடனும், ஒரு திருக்கரம் மஹாலிங்கத்தைத் தாங்கியும், மற்றொருகரத்தில் ஜபமாலை கொண்டும் அருகில் திருவிளக்கமுடையதாயும் விளங்குகிறது.

3. **மூலகாமாக்ஷியின் திருவுருவம்:**—இக் காமாக்ஷி கருப்ப கிருகத்தில், ஸ்ரீ சக்ரத்துக்கு மேற்கில், நேர் அபிமுகமாகப் பதுமாசனத்தாளாய், கிரீடம் தரித்து, பாசம், அங்குசம், கரும்புவில், பஞ்சபாணம் இவற்றைத் திருக்கரங்களில் தாங்கிச் சூரிய சந்திரர்களைக் காதணிகளாகக்கொண்டு ஸ்ரீ ராஜராஜேஸ்வரியாய்ச்சுவர்ணவிளக்கத்துடன் காட்சியளிக்கின்றனள். இம்மூல காமாக்ஷியின் திருவுருவப்படம் இதனோடு இணைக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

4. **ஸ்ரீ சக்கரம்:**—ஸ்ரீ சக்ரயந்திரம் ஸ்ரீ ஆதி சங்கராசாரிய ஸ்வாமிகளால் பிரதிஷ்டை செய்யப் பெற்றது. இக்காஞ்சி நகரமும் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகளால் ஸ்ரீசக்ரரூபமாக அமைக்கப்பெற்றதாக சங்கர விஜயங்கள் கூறுகின்றன.

காயத்ரீ மண்டபத்தின் வெளியேயுள்ள திருச்சுற்றில், சரஸ்வதி தேவி வீணையுடன் இருத்தலைக்

காணலாம். இம்மண்டபத்தின் எதிரிலே, அன்னபூர்ணம்மையும் கோயில் கொண்டுள்ளாள். காமாக்ஷியம்மையின் கருப்பகிருஹத்தின் ஒரு பக்கத்தில், திருமாலினுல் சபிக்கப்பட்ட அரூபலக்ஷ்மியின் உருவும், மற்ருெரு மருங்கில், நங்காமாக்ஷியம்பிகையால் சாபநீக்கம் பெற்றுத் திருமாலை எய்திய ரூபலக்ஷ்மியின் வடிவும் விளங்குகின்றன.

5. **ஸ்ரீ ஆதி சங்கராசாரியார்:**—ஸ்ரீமத் ஆதிசங்கர பகவத்பாதாசாரிய சுவாமிகளின் திருவுருவம் புருஷப் பிரமாண முள்ளதாய், வீற்றிருந்த திருக்கோலமாக ஆறு சீடர்கள் உடனிருக்கத் துறவுக் காட்சியோ டுள்ளது. இச் சுவாமிகளின் தவக்கோலவடிவு, நின்ற வண்ணத்துடனும், வீற்றிருந்த வண்ணத்துடனும் பற்பல இடங்களில் இவ்வாலயத்தே காணப்படு கின்றன.

மேற்கூறிய தெய்வ வடிவங்களையன்றி, அம்பாளின் உற்சவ மூர்த்தியும், சாத்தன், கள்வர், அயக்கிரீவர் முதலியவர்களின் திருவுருவங்களையும் இக்கோயிலகத்தே காணலாகும்.

இங்ஙனம், அன்பர்களின் ஆருயிர்க் காக்கம் பெருகக்கருதி, அறம்வளர்த்த நாயகியாய்ப் பரமேசு வரனுடைய திருவுள்ளத்தையே யன்றி, அவருடைய திருவடிவையும் நெகிழச் செய்யும் ஆற்றலுருவின ளாகிய இவ்வம்பிகையைத் தரிசிக்கப் பெறுவோர் எப்பேறும் பெறுவோராதல் திண்ணம். உள்ளத்தாற் கருதினும், பஞ்சுப்பொதியிற் கனற்பட்டாங்கு பாவ மெல்லாம் நீங்கும் என்பதும் திண்ணம்.



— ஸ்ரீ ஆதிசங்கர பாகவத்பாத மூர்த்தி —



— ஸ்ரீ ஆசாரியாளின் தபஸ் நிலை —

இந்நகரிலுள்ள எல்லாச் சிவாலயங்களிலும், இக் காமாக்ஷியம்மனே மூல அம்பாளாக விளங்குகிருர். இச்சிறப்பு, மற்ற எந்தத் தலத்திலும் இல்லை.

தீர்த்தச் சிறப்பு

இவ்வம்பாள் ஆலயத்தைச் சார்ந்தனவாக நான்கு புண்ணிய தீர்த்தங்கள் புகழப் பெற்றுள்ளன. அவை 1. பஞ்ச தீர்த்தம் 2. காயாரோஹண தீர்த்தம் 3. இட்டசித்தி தீர்த்தம் 4. சக்கர தீர்த்தம் என்பன.

இவற்றுள், அம்பிகையின் ஆலயத்தினுள் தேவியின் கருவறைக்கு மேற்கிலிருப்பது பஞ்ச தீர்த்தம் ஆகும்.

தேவி பந்தகாசுரனைக்கொன்று புதைக்கப் பள்ளந்தோண்டிய பொழுது, அப்பள்ளத்தில் தவஞ் செய்திருந்தஅசுரனைத் திருமால்கொல்லத்தொடங்கிய காலத்தில், அசுரக்கூட்டங்கள் பெருவெள்ளமாகத் தோன்றின. அப்போது, இரண்டு சிவபூதங்கள் தோன்றி அவற்றை யொழித்தன. பின்பு, திருமாலோடும் போர்புரிந்து தோல்வியடைந்தன. அந்நிலையில், திருமால், நின்ருர், இருந்தார், கிடந்தார் என்கிற மூன்றுவித கோலங்களைக்கொண்டார். பின்பு திருமால் சிவபெருமான் கட்டளைப்படி இவ்விரண்டு பூதங்களையும் குளங்களுக்குக் காவலாக அமைத்து, தேவர்களையும், முனிவர்களையும் பார்த்து, "இந்த இரண்டு பூதங்கட்கும் பிரீதியாக வருஷந்தோறும், பூதங்களின் மத்தியிலுள்ள என்னுடைய ஸமீப ஸ்தானத்திலிருக்கும் சிகரத்தின்மேல்நின்று, கர்ப்பிணியான ஒரு தாஸியானவள் பஞ்சதீர்த்தத்தில் வீழ்ந்து

வருவாளாயின், கருப்பத்திலிருந்த சிசுவானது பிழைத்துக் கரையேறும். அவள், விண்ணுலகம் போய், மறு ஜன்மத்தில் பிராம்மண ஜன்மத்தையடைவாள். இதைக் காணப்பெற்றவர்களுக்குப் பிரதி பந்தக பாபமும், பூதப்பிரேத பிசாசம் முதலான கிரக தோஷங்களும் நசித்துவிடும்'' என்று அநுக்கிரஹம் செய்தார். இதுவே, 'கருமாறிப் பாய்ச்சல்' என்று கூறப்படுகிறது.

இத்தீர்த்தத்தில், சக்திக்குரிய வெள்ளிக்கிழமைகளில், நீராடுவோர்க்குப் புண்ணிய நதியாகிய கோதாவரியில் மூழ்கிய புண்ணியம் உண்டு என்பர்.

நிருவாகம்

திருக்காஞ்சியில் உள்ள இந்தக் காமாக்ஷியம்பாள் ஆலயம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகளின் ஆதீனத்திற்குட்பட்டது. அவர்களது நியமனத்தைப் பெற்ற 'ஸ்ரீகார்யம்' என்னும் அதிகாரியால், இக்கோயில் நிருவாகம் கவனிக்கப்படுகிறது. ஆலய வருமானம் பூசைக்குப் போதாதகாலங்களில், மேற்படி மடத்தின் தொகையிலிருந்து செலவுக்குக் கொடுக்கப்படுகிறது. ஆலயத் திருப்பணிகளையும் இவர்களே கவனித்துச் செய்து வருகின்றனர். ஸ்ரீசக்ரயந்திரம், பிலாகாசம் முதலியவற்றின் பழுது போக்கும் பொறுப்புக்களும், கும்பாபிஷேகம் செய்யும் பொறுப்பும் ஷை பீடாதிபதிகளுக்கே உரியவையாகும். சென்ற சுபானு ஆண்டு, தை மாதம், இருபத்தைந்தாம் நாள் (7—2—1944) அன்று, மேற்படி ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீமத் சங்கராசாரிய ஸ்வாமிகளால், இவ்வாலயத்திற்கு, ஜீர்ணோத்தாரண மஹா கும்பாபிஷேகம், சுமார் 40000 ரூபாய் செலவில் விமரிசையாக நடத்தப்பெற்றது.

ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் தேவஸ்தான உத்ஸவங்களின் விபரம்

மாதம்	உத்ஸவம்	நாட்கள்	உபயக்காரர்	விபரம்
சித்திரை	ஸ்ரீ சங்கர ஜயந்தி உத்ஸவம்	10 தினங்கள்	முதல் நாள் ஸ்ரீ A. ஜகனுதய்யர் ஆசார்யாள் & அம்பாள் அபிஷேகம் & சந்தர்பணை உபயம் கடைசி நாள் எசயனூர் மாது ஸ்ரீ காமகோடி கோகிலத்தம்மாள்	இந்த உத்ஸவம் வைசாக சுக்ல பஞ்சமியை முதல் தினமாகக்கொண்டு பத்து தினங்கள் நடைபெறுகிறது. முதல் ஒன்பது நாட்களும் ஸ்ரீ ஆதி சங்கரபகவத் பாதமூர்த்தி மாத்திரம் பிராகாரத்தில் எழுந்தருளச் செய்யப்படுகிறது. பத்தாவது நாள் ஸ்ரீ காமாக்ஷி அம்பாளையும் ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாத மூர்த்தியையும் கோவிலை சுற்றியுள்ள நான்கு ராஜவீதிகளிலும் எழுந்தருளச் செய்யப்படுகிறது. இந்த பத்து தினங்களிலும் ஸ்ரீ ஆதி சங்கரரால் இயற்றப்பட்ட ஸௌந்தர்ய லஹரியில் தினம் பத்து ச்லோகங்கள் ஸ்ரீ அம்பாளுக்கு எதிரே ஸ்ரீ ஆசார்யமூர்த்தியை நிறுத்தி படிக்கப்பட்டு வருகிறது வழக்கம்.
வைகாசி	வஸந்த உத்ஸவம்	3 தினங்கள்	முதல் தினம் ஸ்ரீ நல்லதம்ப முதலியார்	முதல் இரண்டு தினங்களும் ஸ்ரீ அம்பாள் பிராகாரத்திற்கு

மாதம்	உத்ஸவம்	நாட்கள்	உபயக்காரர்	விபரம்
கார்த்திகை	பரணி உத்ஸவம்	ஒரு நாள்		கார்த்திகைமாதம் பரணி நக்ஷத்திரத்தன்று ஸ்ரீ அம்பாள் ஸந்நிதியில் ஹோமம் செய்து தீபம் ஏற்றப்படும்.
,,	கார்த்திகை உத்ஸவம்	,,	கா. சோமசுந்தர முதலியார் பட்டு ஜவுளி வியாபாரம்	இன்று ஸ்ரீ அம்பாளுக்கு விசேஷ அலங்காரத்துடன் நான்கு ராஜவீதி உத்ஸவம் நடைபெறும்.
மார்கழி	திருவாதிரை உத்ஸவம்	,,	ஸ்ரீ. K வடிவேலு முதலியார் வகையரா	இந்த மாதம் ஆருத்ரா நக்ஷத்திரத்தன்று தனுர்மாஸ பூஜைக்குமுன் ஸ்ரீ மூலகாமாக்ஷிக்கும், ஸ்ரீ உத்ஸவ காமாக்ஷிக்கும் விசேஷ அபிஷேகம் நடத்தி தனுர்மாஸ காலசந்தி பூஜைக்குப்பின் உத்ஸவமூர்த்தி நான்கு ராஜவீதிகளுக்கும்எழுந்தருளச் செய்யப்படுகிறது.
,,	கொட்டகை உத்ஸவம்	7 நாட்கள்		இந்த உத்ஸவம் மாட்டுப் பொங்கலுடன் முடிவடைகிறது. பிரதி தினமும் ஸ்ரீ அம்பாள் உத்ஸவமூர்த்தி வடக்குப் பிராகாரத்திலுள்ள கொட்

மாதம்	உத்ஸவம்	நாட்கள்	உபயக்காரர்	விபரம்
				டகை மண்டபத்துக்கு எழுந்தருளச் செய்யப்படுவது வழக்கம். கடைசி தின உத்ஸவத்திற்கு கனுத் திருப்பாவாடை என்று பெயர். இன்று விசேஷ சித்திரான்ன நிவேதனமும் வினியோகமும் உண்டு.
தை	ஸங்கராந்தி	ஒரு நாள்		இன்று உச்சி காலத்தில் ஸ்ரீ அம்பாளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனமும் சக்கரான்ன நிவேதனமும் நடைபெறுகிறது.
,,	திருவூரல் உத்ஸவம்	,,		தைமாதம் மக நக்ஷத்திரத்தன்று காலையில் நித்ய பூஜைக்குப் பிறகு ஸ்ரீ அம்பாள் உத்ஸவ மூர்த்தி விசேஷ அலங்காரத்துடன் தேவஸ்தானத்தைச் சேர்ந்த வேகவதி நதிக் கரையிலிருக்கும் கதிர் பூந்தோட்டத்திற்கு எழுந்தருளச் செய்யப்படுகிறது. அங்கு விசேஷ அபிஷேகமும், நடப்பது வழக்கம்.
மாசி	சிவராத்ரி	,,	முதல் கால அபிஷேகம் லிங்கப்பய்யர் வீதி சுப்பராமய்யர் துவாரா பாடசாலை செட்டியார்	இன்று இரவு எல்லா காலங்களிலும் விசேஷ அபிஷேகங்கள் உண்டு.

மாதம்	உத்ஸவம்	நாட்கள்	உபயக்காரர்	விபரம்
				வீதிகள் வழியாக பவனி செய்விக்கப் பட்டு கோவிலுள் ஆஸ்தானத்திற்கு எழுந்தருளச் செய்யப்படுகிறது. வ்யாஸபூஜை உத்ஸவம் நடந்து இரண்டு மாதங்களுக்குப்பிறகு இவ்வுத்ஸவம் வரும்.
புரட்டாசி	நவராத்திரி	10 நாட்கள்		பிரதிதினம் ஸ்ரீ மூல காமாக்ஷி, உத்ஸவ காமாக்ஷி இரண்டிற்கும் விசேஷ அபிஷேகங்கள் நடைபெறும். பிரதி தினமும் நவாவர்ண பூஜை, கன்யா பூஜை நடத்தப்படுகிறது. இரண்டு வேளையும் யாகசாலை உண்டு. மாலையில் ஸ்ரீ உத்ஸவ காமாக்ஷி பிராகாரத்தில் பிரதக்ஷிணமாக எழுந்தருளச்செய்யப் பட்டு,தெற்கு பிராகாரத்திலுள்ள நவராத்திரி மண்டபத்தில் இரக்கப்பட்டு வாத்யங்களுடன் நைவேத்ய தீபாராதனைகள் செய்யப்பட்டு, சூரஸம்ஹாரம் ஆனபின் பிராகார மார்க்கமாக ஆஸ்தானம் சேர்ப்பிக்கப்படுகிறது.

மாதம்	உத்ஸவம்	நாட்கள்	உபயக்காரர்	விபரம்
				துர்காஷ்டமியன்று ஸ்ரீ துர்க்கை அம்பாள் புறப்பாடு செய்விக்கப்படுகிறது. 10-வது நாள் தேவஸ்தானத் திருக்குளத்தில் தீர்த்தவாரி நடைபெறும். 10வது நாள் தினப்படி பூஜைகளைத் தவிர ஸுவாஸினி பூஜையும், பிரம்மசாரி பூஜையும் நடைபெறுகிறது.
ஐப்பசி	ஐப்பசி பூரஉத்ஸவம்	ஒரு நாள்		ஐப்பசி மாதம் பூர நக்ஷத்திரத்தன்று மாலை ஸ்ரீ உத்ஸவ காமாக்ஷி பிராகாரத்திற்கு எழுந்தருளச் செய்யப்படுகின்றாள். தெற்கு பிராகாரத்தில் ஐப்பசி பூர மண்டபத்தில் மண்டகப்படி தீபாராதனை நடத்துவது வழக்கம். இன்று தினம் தான் மூலஸ்தானத்திலுள்ள பிலாகாசத்திற்கு பால் அபிஷேகம் நடைபெறுகிறது. இது வருஷத்திற்கு ஒரு தினம்தான்.
,,	தீபாவளி உத்ஸவம்	,,	ஸ்ரீ C.S.நடேசய்யர் உபயம்	தீபாவளியன்று விடியற்காலையில் எல்லா ஸந்நிதிகளிலும் தைலாபிஷேகமும், ஸ்ரீ அம்பாளுக்கு நான்கு ராஜவீதி உத்ஸவமும் உண்டு.

மாதம்	உத்ஸவம்	நாட்கள்	உபயக்காரர்	விபரம்
			இரண்டாவது நாள் ஸ்ரீ ராஜ மாணிக்க முதலியார் மூன்றாவது நாள் கொல்லா சத்திரம் ஸ்ரீராகவலு செட்டியார்	எழுந்தருளச் செய்யப்படுகின்றாள். மூன்றாவது நாள் மாலை ஸ்ரீ அம்பாள் ராஜவீதிக்கு எழுந்தருளச் செய்யப் படுகின்றாள்.
ஆனி	வ்யாஸ பூஜை உத்ஸவம்*	ஒரு நாள்		வ்யாஸ பூர்ணிமை தினத்தன்று கோவிலில் உள்ள ஸ்ரீ ஆசார்யமூர்த்தி நான்குவீதிகள் வழியாகக் காலையில் ஸர்வ தீர்த்தக் கரைக்கு எழுந்தருளச் செய்யப்படுகிறது. அங்கு, ஆதியில் ஸ்ரீ ஆதிசங்கரர் காஞ்சீபுரத்திற்கு விஜயம் செய்த காலத்தில் முதல் முதலாக தங்கியிருந்த கோவிலென்று சொல்லப்படுகிற ஸ்ரீ விச்வநாதஸ்வாமி கோவிலில் அபிஷேக ஆராதனம்

* வ்யாஸ பூஜை இம்மாதத்தில் வராமல் ஆடி மாதத்தில் வந்தால் அப்பொழுது இவ்வுத்ஸவம் நடைபெறும்

மாதம்	உத்ஸவம்	நாட்கள்	உபயக்காரர்	விபரம்
				செய்விக்கப்பட்டு பிறகு ஆஸ்தானம் சேர்க்கப்படுகிறது. ஆஸ்தானம் சேர்ந்ததும் வ்யாஸ பூஜை நடத்தப்படுகிறது.
ஆடி	ஆடிப்பூர உத்ஸவம்	ஒரு நாள்	காஞ்சீபுரம் வருமான வரி ஆபீஸ் சிப்பந்திகள்	பிராகாரத்தில் ஸ்ரீ அம்பாள் புறப்பாடு.
ஆவணி	வினாயக சதுர்த்தி உத்ஸவம்	,,		ஸ்ரீ வினாயகருக்கு உத்ஸவம் நடத்தப்படுகிறது.
,,	ஆவணிமூல உத்ஸவம்	,,		ஆவணி மாதம் மூல நக்ஷத்திரத்தன்று ஸ்ரீ அம்பாள் பிராகாரத்திற்கு எழுந்தருளப்படுகிறது.
புரட்டாசி	விச்வரூபயாத்திரை உத்ஸவம்	,,		ஆஷாட சுக்ல பௌர்ணமி யன்று காலையில் ஸ்ரீ ஆசார்ய மூர்த்தி புறப்பாடு செய்விக்கப்பட்டு, ஸ்ரீ உபநிஷத் ப்ரும்மேந்திர மடத்துக்கு எழுந்தருளச் செய்யப்படுகிறது; அங்கு விசேஷ ஆராதனைகள் நடந்த பிறகு மாலையில்

மாதம்	உத்ஸவம்	நாட்கள்	உபயக்காரர்	விபரம்
மாசி	ப்ரம்மோத்ஸவம்	12 தினங்கள்		இது விபரங்கள் தனியாக போடப்பட்டிருக்கிறது.
பங்குனி	தெப்போற்சவம்	மூன்று நாள்	முதல்நாள் மரத்தொட்டி வியாபாரிகள். 2 - வது நாள் செங்கல்பட்டு S. P. ராமய்யர் 3வது நாள்ஷேக்குப்பேட்டை துளசிஷாஉபயம்	
,,	பங்குனி உத்திரம்	ஒரு நாள்	ஒக்கப் பிறந்தான் குளத்தெரு குடிகள் உபயம் T. S. ராமஸ்வாமி அய்யர்.	காலையில் ஸ்ரீ உத்ஸவ காமாக்ஷி ஒக்கப்பிறந்தான் குளத்திற்கு எழுந்தருளச் செய்யப்படுகிறது. மாலை நான்கு ராஜ வீதிகள் வழியாக ஸ்ரீ ஏகாம்பரநாதஸ்வாமி அம்மனுடன் ஷிஸந்நிதி பதினாறுகால் மண்டபம் வரைசென்று பின்பு தேவஸ்தானத்திற்கு எழுந்தருளச்செய்வது வழக்கம்.

★ ப்ரும்மோத்ஸவம் ★

இவ்வுத்ஸவம் மாசி மாதத்தில் நடைபெறுகிறது. உத்ஸவ ஆரம்பத்திற்கு முதல் நாள் மாஸ விநாயகர் புறப்பாடு, ம்ருத்ஸங்க்ரஹணம், அநுக்ஞை, வாஸ்துசாந்தி, முதலிய பூர்வாங்கங்கள் ஆன பிறகு, மறுநாட் காலையில் த்வஜாரோகணம் நடைபெறும்.

ப்ரும்மோத்ஸவ விபரம்

தினம்	காலை, மாலை	வாஹனம்	உபயக்காரர்	விபரம்
முதல் நாள்	காலை	விருஷப வாஹனம்	A.D.வேங்கட்டராமய்யர்	
,,	மாலை	மான் வாஹனம்		
2வது நாள்	காலை	மகர வாஹனம்		
,,	மாலை	சந்திரப் பிரபை	காஞ்சீபுரம் ரயில்வே ஸ்டேஷன்சிப்பந்திகள் ஸ்வல்ப உபயம்	
3வது நாள்	காலை	ஸிம்ஹ வாஹனம்	பெரிய காஞ்சீபுரம் இருப்புக் கடை வியாபாரிகள்	

தினம்	காலை, மாலை	வாஹனம்	உபயக்காரர்	விபரம்
3வது நாள்	மாலை	யானை வாஹனம்	காஞ்சீபுரம் பட்டு நூல் ஜவுளி வியாபாரிகள் சங்கத்தார்	
4வது நாள்	காலை	சூர்யப் பிரபை		
,,	மாலை	ஹம்ஸ வாஹனம்	பெரிய காஞ்சீபுரம் ஷாப்பு வியாபாரிகள்	
5வது நாள்	காலை	பல்லக்கு	சென்னை லாட் கோவிந்த தாஸ்	[இன்று மோஹினி அலங்காரம். இன்று மட்டும் மாட வீதி உத்ஸவமும் உண்டு. ஸ்ரீ ஜகன்னாதய்யர் வீட்டு வாசலில் மண்டகப்படி.]
,,	மாலை	நாக வாஹனம்		
6வது நாள்	காலை	சப்பரம்	ஸத்திய விஜயராவ்	
,,	மாலை	கிளி வாஹனம்		
7வது நாள்	காலை	ரதோத்ஸவம்	காஞ்சீபுரம் பலசரக்கு வியாபாரிகள்	
8வது நாள்	காலை	பத்திர பீடம்	சென்னை S. ரத்தினவேல் செட்டியாரின்	

தினம்	காலை, மாலை	வாஹனம்	உபயக்காரர்	விபரம்
			நிதியிலிருந்து உபயம்	
	மாலை	குதிரை வாஹனம்	பெரிய காஞ்சீபுரம் தான்ய வியாபாரிகள் சங்கத்தார்	
9வது நாள்	காலை	ஆள்மேல் பல்லக்கு	கோயம்புத்தூர் எலக்ட்ரிகல் இன்ஜினீயர் ஸ்ரீ T.S. ஜேயராம அய்யர்	
,,	மாலை	காமகோடிவிமானம்	பெரிய காஞ்சீபுரம் கைலி வியாபாரிகள் சங்கம்	
10வது நாள்	காலை	சரபபக்ஷிவாஹனம்		ஸ்ரீ அம்பாள் வீதி உத்ஸவம் முடிந்ததும் தேவஸ்தான திருக்

தினம்	காலே,மாலே	வாஹனம்	உபயக்காரர்	விபரம்
10வதுநாள்	மாலே	கல்பகோத்யானம் (மாவடி ஸேவை)	காஞ்சிபுரம் பட்டு, மளிகை, சாய வியாபாரி கள்	குளத்தில் தீர்த்தவாரி நடைபெறும் உத்ஸவம் முடிந்ததும் த்வஜ அவரோஹணம்

குறிப்பு:— பதினோராவது நாள் மாலே மஹா மேருவாஹனம். (ஜவுளிக்கடை ஸ்ரீ கிருஷ்ண ராவ்) பனிரெண்டாவது நாள் உதயாத் பூர்வம் விச்வ ரூபதர்சனம். உத்ஸவம் ஆனபிறகு உபயக்காரர்கள் ஏற்படுவதற்கு தகுந்தவாறு விடாயாற்றி உத்ஸவம் நடைபெறுகிறது. விடாயாற்றி கடைசிதினத்திற்கு முதல் தினம் சந்தணக் காப்பு உத்ஸவம் நடைபெறும். விடாயாற்றி கடைசிதினம் நான்கு வீதிகளில் புஷ்பப் பல்லக்கு உத்ஸவம், ஸ்ரீ ஸீதாராமஸா வம்சத்தினரால் நடைபெறுகிறது. இன்று ஷேக்குபேட்டையில் மண்டகபடி.

APPENDIX A.

சித்திரை மாதம் 1௳ மாஸப்ரவேச உத்ஸவம். அன்று ஸ்ரீ அம்பாள் ப்ராகார பிரதக்ஷணமாக சுக்கர வார மண்டபத்தில் இறங்கியதும், வருஷப்பிறப்பு ஆனதால் பஞ்சாங்க படனம் ஆனபிறகு, தீபாராதனை நடத்தி ஆஸ்தானம் சேர்ப்பிக்கப்படுகிறது.

APPENDIX B.

பிரதி வருஷம் வ்யாஸ பூஜை ப்ரயுக்தமாக வ்யாஸ பூஜைக்குச் சில தினங்கள் முந்தி, ஸ்ரீ காம கோடி பீடாதிபதிகளின் ஆக்ஞையுடன் இவ்வூர் மஹாஜனங்களுக்கு ஸ்ரீ அம்பாள் ஆலயத்தில் ஸ்ரீமுக படனம் செய்யப்பட்டு வருகிறது. இதுஸமயம் ஸ்ரீ மடத்திலிருந்து ஸ்ரீமுகத்தை மேள வாத்தியங் களுடன் ஊர்வலமாக தேவஸ்தானத்திற்குக் கொண்டு வந்து சேர்ப்பித்து, சுக்ரவார மண்டபத்தில் ஸ்ரீ ஆசார்யாள் உத்ஸவ மூர்த்தியையும் எழுந்தருளச் செய்து, ஸ்ரீமுக படனம் செய்யப்பட்டு வருகிறது.

APPENDIX C.

பிரதி சுக்ரவாரத்திலும், அமாவாஸையிலும், மாதப்பிறப்பிலும் ஸ்ரீ அம்பாளுக்கு ப்ராகார உத்ஸவமும், பௌர்ணமியன்று மாலை ஸ்ரீ ஆசார்ய உத்ஸவ மூர்த்தியுடன் மாடவீதி உத்ஸவமும் உண்டு. மாடவீதி உத்ஸவம் A. ஜகன்னாதய்யர் உபயம். பௌர்ணமி உத்ஸவத்திற்குப் பிறகு அம்பிகைக்கு நவாவர்ண பூஜை நடத்தப்படுகிறது.

சிற்பங்கள்

இக்காமாக்ஷியம்பாள் ஆலயத்தில் சாஸ்தாவிற்கு முன்பு இருக்கும் மண்டபத்தில், இரண்டாவது தூணில், ஸ்ரீ காமாக்ஷியம்பாள் உட்கார்ந்த தவக்கோலத்துடன் காட்சியளிக்கும் சிற்பம் தென்படுகிறது.

காயத்ரீமண்டபத்துக்குள் நுழையும் வாயிற் படிக்குப் பக்கத்தில், ஸ்ரீ அன்னபூரணி ஸ்தானத்திற்குப் பக்கமுள்ள கருங்கல் மண்டபத்தில், வலது பக்கத்துப் பின் தூணில், தபஸ் காமாக்ஷியின் சிற்பம் நின்ற கோலத்துடன் காட்சியளிக்கிறது.

கல்வெட்டு

இக்கோயிலின் உட்பிராகார வாயிலில், வலதுபுறத்தில், ஒரு கல்வெட்டு காணப்படுகிறது அது வருமாறு:—

ஶ ஶ ஷீ௪ ஶ²ஹெ
சக்த்யாலோகே சகாப் தே பரிணமதி சு பே
வா ஃ
ஸ்ரீமுகா ஷாட மாஸே
ஶ² ௪ உஶ தி
சு த் தே பக்ஷே தசம்யாம் ரவிஸு²த திவஸே
ஹெ
மித்ரயே ஜைத்ர தேஜா:
ஶௌஷீ
காஞ்ச்யாம் கல்யாண சோபீ ஹரிஹர ந்ருபதி(:)
ஒ ய²
ப்ராண பந்து(:) ப்ரஜாநாம்
காமாக்ஷ்யா: ஸ்ரீ விமாநம் வ்யதநுத ஸு²க்ருதாம்
ஹெ யி ஒ ய
போ நிதி ஸ்தாம்ர பந்தம் ||

[Archaeological Survey of India, South Indian Inscriptions (Texts) Volume iv 1924, Page 99.]

'சக்த்யாலோகே' என்பதால், 1315ஆ சாலீ வாஹனசகம் ஸ்ரீமுக வருஷம் என்று ஏற்படுகிறது. அவ்வருஷம், ஆஷாட மாசத்தில், சுக்லபக்ஷ தசமியில் ஸ்ரீ அம்பாள் விமானத்திற்கு (ஸ்ரீ ரங்கத்திலும், சிதம்பரத்திலும் உள்ளதைப்போல், தாமிரத்தகடு, ஹரஹரமஹாராஜாவால் போடப்பட்டது என்று அர்த்தமாகிறது. இந்த ஹரிஹரமஹாராஜா ஸ்ரீவித்யாரண்யர் ஸ்தாபித்த விஜயநகரம் அரசனுகவே இருக்கவேண்டுமென்று, இக் கால கணனத்தை யநுசரித்து அறியப்படுகிறது.

இக் கோயிலில் தத்துவ மண்டபம், காவேரி மண்டபம், கிழண்டை கோபுரம் வேலைப்பாடுள்ளது.

நித்யபடி பூஜைகள்

பூஜைகள்	நைவேத்யம்
1. உஷத்காலம்	தயிர்சாதம் ½ படி
2. காலைசந்தி	சுத்தான்னம் 4 படி
3. உச்சிகாலம்	Do 1 படி
4. சாயரக்ஷை	Do 2 படி
5. அர்த்தஜாமம்	வடை, தோசை, சக்கரை [பொங்கல்

வருடாந்திர சிலவு ரூ. 14302/-

நித்தியபடி பூஜை	11—0—0
விசேஷ உற்சவங்கள்	1,745—0—0
தேரோட்டம்	130—0—0
சில்லரைக் கோயில் பூசை...	
நிர்வாக ஆபீஸ் சிலவு	3,372—0—0
ரிப்பேர்	310—0—0
விளக்குகள்	232—0—0
அன்னதானம்...	
கிஸ்தி	1,620—0—0
முனிஸிபல் வரி	85—0—0

சொத்து விவரம்

வருஷத்தில் 5,500 ரூபாய் கிஸ்தி வரக்கூடிய 'புதுப்பாக்கம்' என்னும் சுரோத்திரிய கிராமம், இவ்வம்பிகைக்குச் சொந்தமானது; மேலும், தேவஸ்தானத்திற்குச் சொந்தமாக, நந்தவனங்களும், வீடுகளும் உள்ளன. சர்க்கார் மோகினி ஆண்டொன்றுக்கு ரூ. 1,375—7—0 வருகிறது. கோயிலுக்கு ரூ. 2,793—8—0 பெறுமானமுள்ள வாகனங்களும், சுமார் ரூ. 22,500 பெறுமானமுள்ள பொன், வெள்ளி, ரத்னநகைளும் இருக்கின்றன. சுமார் ரூ. 75,000 செலவில், ஸ்ரீ சக்ர உருவில் ஒரு வெள்ளி ரதம் புத்தம் புதிதாக நிர்மாணிக்கப்பெற்றிருக்கிறது.

தலப்பெருமை உரைக்கும் நூல்கள்

1. ஸ்ரீ சுகப் பிரம்மம், பரீக்ஷித் மகாராஜாவுக்கு, ஏழுநாட்களில் உபதேசித்த ஸ்ரீ பாகவதத்தில் தசமஸ்கந்தத்தில் ஸ்ரீ பலராம தீர்த்தயாத்திரை விளக்கத்தில் இவ்வூர் "காமகோடிபுரீ" என்று கூறப்பட்டுள்ளது.

"காம கோடிபுரீம் காஞ்சீம்
காவேரீம்ச ஸரித்வராம்
ஸ்ரீரங்காக்யம் மஹாபுண்யம்
யத்ரஸந்நிஹிதோஹரி:"

2. ஸ்ரீ சத்தி நாமங்களைப்புகலும், ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமத்திலும், லலிதாத்ரிசதி நாமத்திலும், லலிதாஷ்டோத்தர சதநாமத்திலும் இவ்வம்பிகையின் பெயர் குறிக்கப்பட்டுள்ளது.

3. லலிதோ பாக்கியானத்தில், அகத்தியர் இதோபதேசகதன அத்தியாயத்தில், அகத்திய முனிவர் கலியின் பாவங்கடியவல்ல காமக்கண்ணி யாரை வழிபட்டதாகக் கூறப்பட்டுள்ளது. மற்றும், இவ்வம்பிகையின் தோற்றத்துக்குரிய முகாந்தரமும், இந்நூலில் *34*–வது அத்தியாயத்தில் கூறப்படுகிறது.

4. கார்வேட் நகர சமஸ்தானத்தாரால் *1889*-ஆம் ஆண்டில், அச்சிடப்பட்டுள்ள "காமாக்ஷீ விலாஸம்" என்ற நூலில், இவ்வம்பிகைக்குரிய பிரதிஷ்டை முதலிய விவரங்கள், "சிந்தாமணி" தந்திரப்படி நடைபெறவேண்டுமென்று குறிக்கப்பட்டுள்ளது.

5. ‘Bengal Encyclopaedia’ அல்லது ‘விச்வ கோசம்’ என்னும் பதிப்பில், ஸ்ரீ ஆதிசங்கரர் சமாதி யிருப்பது, இவ்வம்பிகாலயத்தின் ஒரு பகுதியிலே என்றுரைக்கப்பட்டுள்ளது. மேற்படி விஷயம், பழைய இதிகாசமாகிய ‘சிவரகசியம்’என்ற நூலிலும் ‘பதஞ்சலி விஜயம்’என்னும் காவியமாலைப்பதிப்பிலும் ஆனந்தலகிரி சங்கரவிஜயத்திலும், சங்கராட்யுதயம் என்னும் காவியத்திலும் கூறப்பட்டுள்ளது.

6. ஸ்ரீ லலிதோபாஸனு மார்க்கம் முதலிய வற்றைப் பற்றிக்கூறும் சென்னைச் சர்வ காலைத்தேச சரித்திர சில்ப இலாகாவில், எட்டாம் நம்பர் அறிக்கையில், 30-ம் பக்கத்தில், “ஸ்ரீ தேவியின் உபாஸனையும், காஞ்சியும்” (Lalita cult and Kanchi) என்ற தலையங்கத்தின் கீழ் பின்வருமாறு காணப்படு கிறது.

“Among the other places Sacred to Lalita is Kanchi where the goddess enshrined herself by the name of Kamakshi. Here in this place *Lalita is Said* to have attained her Vyakti as Kamakshi.

“ லலிதா ஸைவ காமாக்ஷீ
காஞ்ச்யாம் வ்யக்தி முபாகதா
ஸரஸ்வதி ரமா கௌர்ய:
தாமேவாத்யாம் உபாஸதே.”

என்ற குறிப்புகள், இத்தலத்தையும் மூர்த்தியையும் பற்றிப் புகல்கின்றன.

7. சவுந்தர்யலஹரி, ஸ்ரீமூக கவியின் பாக்கள், சிலப்பதிகார அடியார்க்கு நல்லாருரை, பெரிய புராணம், கந்தபுராணம், காஞ்சிப் புராணம் முதலிய நூல்களிலும் இவ்வம்பிகையைப் பற்றிக் கூறப்பெற்றுள்ளன.

8. மற்றும், இத்தலத்து அம்பிகை விஷயம் வருகின்ற மூவர் தேவாரப் பாசுரப்பகுதிகள் சில பின்னே தரப்பட்டுள்ளன. வடமொழியிலுள்ள, ஸ்ரீமூக கவியாலறைப்பட சில ச்லோகங்களும் எழுதப்பட்டுள்ளன.

முடிவுரை

அடைந்தாலும், கேட்டாலும், சொன்னலும், வணங்கினலும் பேரின்ப வீட்டை நல்கும் இப்பெரும் பதியை யடைந்து, அம்பிகையின் செம்பொன்னடியில் வீழ்ந்து, அல்லல் தவிர்ந்து, அறிவினைப் பெற்று அம்பிகையின் அருளினை யடைந்தின்புற்றிருப்பாராக.

காஞ்சிப்புராணம்

எல்லைதீர் காஞ்சி யுள்ளார் யாவரு முனிவர் அங்கண்
கல்லெலாம் இலிங்கம் சீதப் புனலெலாம் கங்கை சொல்லும்
சொல்லெலா மனுக்கள் கைகாற் ருெழிலெலாம் விடையோன்ஏவல்
செல்லலாம் தகைத்தன் றம்ம தென்திசைக் கிழவர்க்கு அவ்வூர்.

ஓம்

பாடல்கள்

திருநாவுக்கரசு அருளியது

திருக்காஞ்சித் திருமேற்றளி

" செல்வியைப் பாகங்கொண்டார்..."

...அருந்தவத்தாள், ஆயிழையாள் உமையாள்...

திருச்சிற்றம்பலம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியது

திருவேகம்பம்—பண்—தக்கேசி

திருச்சிற்றம்பலம்

1...ஏலவார் குழலாளுமை நங்கை...

2...அற்றமில் புகழாளுமை நங்கை...

3...வரிகொள் வெள்வளையா ளுமை நங்கை...

4...கெண்டையந்தடங் கண்ணுமை நங்கை...

5...எல்லையில் புகழாளுமை நங்கை...

6...மங்கை நங்கை மலைமகள்...

7...எண்ணில் தொல்புகழாளுமை நங்கை...

8...அந்தமில் புகழாளுமை நங்கை...

9...பரந்த தொல் புகழாளுமை நங்கை...

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் அருளியது

திருக்கச்சி யேகம்பம்: திரு இயமகம்

பண்—பழம்பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்

முதிர மங்கை தவஞ்செய்த காலமே
முன்பு மங்கை தவஞ்செய்த காலமே
வெதிர்க ளோடகில் சந்தமு ருட்டியே
வேழ மோடகில் சந்தமு ருட்டியே
அதிர வாறு வரத்தொழு வத்தொடே
ஆன்நெய் ஆடுவ ரத்தழு வத்தொடே
கதிர்கொள் பூண்முலைக் கம்பம் இருப்பதே
காஞ்சி மாநகர்க் கம்பம் இருப்பதே.

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசர் அருளியது

திருவேகம்பம்; திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

பெருந்தவத்தெம் பிஞ்ஞகன்காண் பிறைசூடிகாண்
பேதையேன் வாதையுறு பிணியைத் தீர்க்கும்
மருந்தவன்காண் மந்திரங்க ளாயினான் காண்
வானவர்கள் தாம்வணங்கும் மாதேவன் காண்
அருந்தவத்தாள் ஆயிழையாள் உமையாள் பாகம்
அமர்ந்தவன்காண் அமரர்கள்தாம் அருச்சித்தேத்த
இருந்தவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காணவனென் எண்ணத்தானே.

திருச்சிற்றம்பலம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியது

திருவேகம்பம்: பண்-தக்கேசி

திருச்சிற்றம்பலம்

ஆலந் தானுகந் தமுதுசெய் தானை
 ஆதி யையம ரர்தொழு தேத்தும்
சீலந் தான்பெரி தும்முடை யானைச்
 சிந்திப் பாரவர் சிந்தையு ளானை
ஏல வார்குழ லாளுமை நங்கை
 என்று மேத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பனெம் மானைக்
 காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே. 1.

உற்ற வர்க்குத வும்பெரு மானை
 யூர்வ தொன்றுடை யானும்பர் கோனை
பற்றி னார்க்கென்றும் பற்றவன் றன்னைப்
 பாவிப் பார்மனம் பாவிக்கொண் டானை
அற்ற மில்புக ழாளுமை நங்கை
 யாத ரித்து வழிபடப் பெற்ற
கற்றை வார்சடைக் கம்பனெம் மானைக்
 காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே. 2.

திரியு முப்புரந் தீப்பிழம் பாகச்
 செங்கண் மால்விடை மேற்றிகழ் வானைக்
கரியி னீருரி போர்த்துகந் தானை
 காம னைக்கன லாவிழித் தானை
வரிகொள் வெள்வளை யாளுமை நங்கை
 மருவி யேத்தி வழிபடப் பெற்ற
பெரிய கம்பனை யெங்கள் பிரானைக்
 காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே. 3.

குண்ட லந்திகழ் காதுடை யானைக்
கூற்று தைத்த கொடுந்தொழி லானை
வண்ட லம்புமலர்க் கொன்றையி னானை
வாள ராமதி சேர்சடை யானைக்
கெண்டை யந்தடங் கண்ணுமை நங்கை
கெழுமி யேத்தி வழிபடப் பெற்ற
கண்ட நஞ்சுடைக் கம்பனெம் மானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே. 4.

வெல்லும் வெண்மழு வொன்றுடை யானை
வேலை நஞ்சுண்ட வித்தகன் றன்னை
அல்லல் தீர்த்தருள் செய்யவல் லானை
யரும றையவை யங்கம்வல் லானை
எல்லை யில்புக ழாளுமை நங்கை
யென்று மேத்தி வழிபடப் பெற்ற
நல்ல கம்பனை யெங்கள் பிரானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே. 5.

திங்கள் தங்கிய சடையுடை யானைத்
தேவ தேவனைச் செழுங்கடல் வளருஞ்
சங்க வெண்குழைக் காதுடை யானைச்
சாம வேதம் பெரிதுகப் பானை
மங்கை நங்கை மலைமகள் கண்டு
மருவி யேத்தி வழிபடப் பெற்ற
கங்கை யாளனைக் கம்பனெம் மானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே. 6.

விண்ண வர்தொழு தேத்தநின் றானை
வேதந் தான்விரித் தோதவல் லானை
நண்ணி னார்க்கென்று நல்லவன் றன்னை
நாளு நாமுகக் கின்ற பிரானை

எண்ணில் தோல்புக ழாளுமை நங்கை
யென்று மேத்தி வழிபடப் பெற்ற
கண்ணு மூன்றுடைக் கம்பனெம் மானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே. 7.

சிந்தித் தென்று நினைந்தெழு வார்கள்
சிந்தை யிற்றிக ழுஞ்சிவன் றன்னைப்
பந்தித் தவினைப் பற்றறுப் பானைப்
பாலோ டானஞ்சு மாட்டுகந் தானை
அந்த மில்புக ழாளுமை நங்கை
பரவியேத்தி வழிபடப் பெற்ற
கந்த வார்சடைக் கம்பனெம் மானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே. 8.

வரங்கள் பெற்றுழல் வாளரக் கர்தம்
வாலி யபுர மூன்றெரித் தானை
நிரம்பிய தக்கன் றன்பெரு வேள்வி
நிரந்த ரஞ்செய்த நிட்கண் டகனைப்
பரந்த தோல்புக ழாளுமை நங்கை
பரவி யேத்தி வழிபடப் பெற்ற
கரங்க ளெட்டுடைக் கம்பனெம் மானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே. 9.



முத்துஸ்வாமி தீக்ஷிதர் கீர்த்தனை

ராகம்—கனகாம்ப்ரி; தாளம்—திஸ்ரஜாதி ஏகதாளம்

பல்லவி

ஷ
கனகாம் ப ரி காருண்யாம்ருத லஹரீ
காமாக்ஷி மாமவ காமேச்வரி

அநுபல்லவி

ஷி உ
தினகர சந்தர தேஜ: ப்ரகாஶகரி
ஷே உ
தே வி மஹாத்ரிபுர ஸுந்தரி ஶங்கரி (கன)

சரணம்

ஷி
த்ரை லோக்ய மோஹனுதி சக்ரேஶ்வரீ
உ ஷ ஹா
த்ரைபத பர ப்ர ம்ஹ மஹிஷி பாஸ்வரி
ஷி ஊ
ஸாலோ காதி முக்தி ப்ரதா ன கரி
ஊ ஶு ஶு உ
ஸதா ஶிவகரி குருகுஹோதய கரி
ஷி யா ஹ
மூலாதி நவாதா ரேஶ்வரி ஶுபகரி
ய உ
நீலா ளகதரி நித்யா நந்தகரி
யி
லீலா விஶ்வோத்பத்தி ஸ்திதிலய கரி
ஷா உ
பால பரமேஶ்வரி பஞ்சதஶாக்ஷரி (கன)

காரண பரசித்ரூபா
காஞ்சிபுர ஸீம்நி காமபீடகதா,
காசன விஹரதி கருணு
காச்மீர ஸ்தபக கோமளாங்கலதா

ஸமர விஜய கோடீ, ஸாதகானந்த தாடீ
ம்ருதுகுண பரிபேடீ, முக்யகாதம்பவாடீ ।
முனிநுத பரிபாடீ மோஹிதா ஜாண்டகோடீ
பரமசிவ வதூடீ பாதுமாம் காமகோடீ ॥